

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.9.2024) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் கொளத்தூர், பேப்பர் மில்ஸ் சாலையில் புதியதாக அமையவுள்ள வட்டாட்சியர் அலுவலகம், சார் பதிவாளர் அலுவலகம், பகிர்ந்த பணியிடம் (Coworking Space) மற்றும் வணிக வளாகங்கள் என 32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடித்தளம், தரைத்தளம் மற்றும் 4 தளங்களுடன் கூடிய "மக்கள் சேவை மையம் (Citizen Service Centre) கட்டப்படவுள்ள இடத்தினை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பி. வில்சன், கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் நீரேற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி.வினய், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் இயக்குநர் பி. கணேசன், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல் துணை ஆணையர் கே.ஜே. பிரவீன் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.9.2024) கொளத்தூர், ஜி.கே.எம். காலனி 12வது தெருவில், பெருநகர சென்னை மாநகராட்சி தொடக்கப் பள்ளிக் கட்டடத்தை திறந்து வைத்து, பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு புத்தகப் பை உள்ளிட்ட கல்வி உபகரணங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பி. வில்சன், கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் நீரேற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி.வினய், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் இயக்குநர் பி. கணேசன், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல் துணை ஆணையர் கே.ஜே. பிரவீன் குமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 443 கழக நிர்வாகிகளுக்கு சிறப்பு செய்தார் முதல்வர்!

## கொளத்தூர் தொகுதியில் திட்டப் பணிகள்.. முதல் பக்கத் தொடர்ச்சி

புதியதாக அமையவுள்ள வட்டாட்சியர் அலுவலகம், சார் பதிவாளர் அலுவலகம், பகிர்ந்த பணியிடம் (Coworking Space) மற்றும் வணிக வளாகங்கள் என 32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடித்தளம், தரைத்தளம் மற்றும் 4 தளங்களுடன் கூடிய "மக்கள் சேவை மையம் (Citizen Service Centre)" கட்டப்படவுள்ள இடத்தினை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் முதலமைச்சர் அவர்கள் கொளத்தூர் பகுதிக்கான அலுவலர்கள் மற்றும் நிர்வாகிகளை சந்தித்து, தொகுதி மேம்பாட்டுப்பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினார். அதனைத் தொடர்ந்து மூத்த முன்னோடி ஏகப்பன் உள்ளிட்ட 443 நிர்வாகிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் சிறப்பு செய்தார்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பி.வில்சன், கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் நீரேற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி. வினய், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் இயக்குநர் பி.கணேசன், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல் துணை ஆணையர் கே.ஜே.பிரவீன் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகள்... முதல் பக்கத் தொடர்ச்சி

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவாக 2023ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதிற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள கவிஞர் முகமது மேத்தா அவர்கள் பெரியகுளத்தில் 1945 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5ஆம் நாள் பிறந்தவர். தமிழ் மீது தணியாத பற்று உடையவர்; சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி மாணவர்களின் அன்பைப் பெற்றவர். மரபுக் கவிதைகள், புதுக்கவிதைகள், சிறு கதைகள், நாவல்கள், கட்டுரைகள், எனப் பல்வேறு நூல்களையும் படைத்து 70க்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கும் பாடல்கள் எழுதி தமது தனி முத்திரைகளைத் திறம்படப் பதித்தவர்.

அவர் எழுதிய, "ஊர்வலம்" எனும் கவிதை நூலுக்குத் தமிழ்நாடு அரசின் முதல் பரிசும், "ஆகாயத்துக்கு அடுத்த வீடு" எனும் கவிதை நூலுக்கு, "சாகித்ய அகாடமி" விருதும் பெற்ற பெருமைக்குரியவர். தம் வாழ்நாள் முழுதும் தமிழுக்கு அருந்தொண்டாற்றி வரும் கவிஞர் மு.மேத்தா அவர்களைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையில், "கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது" முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வழங்கப்படுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவாக, பெண்மையைப் போற்றும் வகையில் சிறப்பினமாக 2023 ஆம் ஆண்டிற்கு மட்டும் கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதிற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள இசைக்குயில் திருமதி.பி.சுசீலா அவர்கள் 1935ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 13ஆம் நாள் ஆந்திர மாநிலம் விஜயநகரத்தில் பிறந்தவர். இசை மீது கொண்டிருந்த அதீத பற்றின் காரணமாக ஆந்திராவின் புகழ்பெற்ற இசைமேதை துவாரம் வெங்கிடசாமி நாயுடுவிடம் முறையாக இசை பயின்று 1950ஆம் ஆண்டு சென்னை வானொலியில் 'பாப்பா மலர்' எனும் நிகழ்ச்சியில் பாடத் தொடங்கினார். தேனினும் இனிய தனது குரலால் அனைவரையும் கவர்ந்து, ஏறத்தாழ 70 ஆண்டுகளுக்கும் மேலான தனது இசைப் பயணத்தில், 25.000க்கும் மேற்பட்ட தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னட மொழிகளில் தொடர்ந்து பாடி சாதனைகள் படைத்தவர். இசையுலகத்தினராலும், ரசிகர்களாலும் "இசைக்குயில்" என்றும், "மெல்லிசை அரசி" என்றும், "கான கோகிலா" என்றும் பாராட்டப்பட்டவர் அவர்.

சிறந்த பின்னணிப் பாடகி எனத் தமிழ்நாடு அரசின் விருதுகளையும், ஒன்றிய அரசின் விருதுகளையும் பலமுறை பெற்றுள்ளதோடு, இந்திய மொழிகளில் அதிக எண்ணிக்கையில் பாடல்களைப் பாடியமைக்காக கின்னஸ் புத்தகத்திலும் இடம் பெற்ற பெருமைக்குரியவர். இசைக்குத் தன்னையே அர்ப்பணித்து இன்றளவும் தனித்துவமாய் விளங்கிடும் அம்மையார் திருமதி.பி.சுசீலா அவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில், "கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது" வழங்கப்படுகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகளை 30.9.2024 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கிச் சிறப்பிக்கிறார்.

சென்னை, மாமல்லபுரம், குற்றாலம் - வால்பாறை ஆகிய இடங்களில்

# புதுப்பிக்கப்பட்ட ஓய்வு இல்லங்கள் விரைவில் திறக்கப்படும்!

## அமைச்சர் சி.வி. கணேசன் அறிவிப்பு!

சென்னை, செப். 25-

அமைப்புசார்ந்த தொழிலாளர்களின் நலன் காப்பதற்காக உருவாக்கப்பட்ட தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 80வது வாரியக் கூட்டம் நேற்று 24.09.2024 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் மற்றும் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் தலைவருமான சி.வி. கணேசன் தலைமையில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியக் கருத்தரங்குக் கூடத்தில் நடைபெற்றது.



முதன்மை செயலாளர்/ தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த் இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் உறுப்பினர்களை வரவேற்று பேசினார்கள்.

இக்கூட்டத்தில் அமைச்சர் பேசியதாவது,

• சட்டமன்ற பேரவை அறிவிப்பின்படி, சென்னை, மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் உள்ள ஓய்வு இல்லங்கள் புதுப்பிக்கப்பட்ட ஓய்வு இல்லங்கள் விரைவில் திறக்கப்படுகிறது.

• வாரிய நலத்திட்டப் பயன்களை அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் பயன் பெறுவதற்கு ஏதுவாக தற்போதுள்ள ஊதிய உச்ச வரம்பு ரூ.25,000/ லிருந்து ரூ.30,000/ உயர்த்தப்படுகிறது.

• கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் 30,134 தொழிலாளர்களுக்கு 12.54 கோடி ரூபாய் மதிப்பிலான நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் திருமண உதவித் தொகை 3264 பயனாளிகளுக்கு ரூ.4,27,75,000/ வழங்கப்பட்டுள்ளது. மேலும், கடந்த 3 ஆண்டுகளில் இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை 902 வாரிசுதாரர்களுக்கு ரூ.2,87,85,000/ம், விபத்து மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை 241 வாரிசுதாரர்களுக்கு ரூ.2,85,02,000/ வழங்கப்பட்டுள்ளது.

• தற்போது, திருமண உதவித் தொகையினை ரூ.10,000/லிருந்து ரூ.20,000/ ஈக உயர்த்தி வழங்கப்படுகிறது. மேலும், இயற்கை மரண உதவித் தொகையினை ரூ.25,000/ லிருந்து ரூ.50,000/ ஆகவும், விபத்து மரண உதவித் தொகையினை ரூ.1,00,000/ லிருந்து ரூ.2,00,000/ ஆகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

மேலும், இக்கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசுச் செயலாளர் கொ. வீரராகவ ராவ், முதன்மை செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் கே.ஜெகதீசன், நிதித்துறை துணைச் செயலாளர் தயாளன், பூவிருந்த வல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, நிர்வாகத் தரப்பு பிரதிநிதிகள் கே.மாணிக்கம் (EFSI), எஸ். அன்புராஜன் (TANSA), சி. லோகநாதன் (TEA), ஆர்.சீனிவாசன், (TNHA) பிரதீப் சுகுமார் (PAT), தொழிலாளர் பிரதிநிதிகள், கே. நடராஜன் (LPF), டி.எம். மூர்த்தி (AITUC), வி.குமார் (CITU), எஸ். சரவணன் (INTUC), ஆர். அந்திரி தாஸ் (MLF) நியமன உறுப்பினர்கள் செல்வி. எஸ். கலையரசி மற்றும் பி. சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியச் செயலாளர் திருமதி உ.உமா தேவி அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

# பழனியில் சிறு - குறு வியாபாரிகள் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும்!

## ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. பேச்சு!

திண்டுக்கல், செப். 25 -

பழனி கோவில் அடிவாரம் கிரிவலப் பாதையில் சிறு வியாபாரம் செய்த அன்றாட பிழைப்பு நடத்தும் மக்களின் வாழ்வாதாரம் பாதுகாத்திட நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி கோரிக்கை முடிவை உயர் நீதிமன்ற கிளை அமைத்த குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற நீதி அரசர் பாரதிதாசன் அவர்களிடம் கோரிக்கை மனுவை அளித்து விட்டு சிறு வியாபாரிகள் மத்தியில் பேசியதாவது கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் தலைமையில் நடைபெறும் திராவிட மாடல் ஆட்சியில் அனைத்து தரப்பு மக்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும் அதிலும் அன்றாடம் பிழைப்பு நடத்தும் சிறுகுறு வியாபாரிகள் ஆகிய பழனி கோவில் அடிவார பகுதியில் சிறிய கடையை கிரிவலம் பாதையில் அமைத்து வியாபாரம் செய்து பிழைப்பு நடத்தும் சிறு வியாபாரிகள் வாழ்வாதாரம் பாதுகாப்பை உறுதி செய்திடும் வகையில் நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் திராவிட மாடல் ஆட்சி உள்ளது.

சிறு குறு வியாபாரிகள் வாழ்வில் முன்னேற்றம் காண உலக நாடுகளின் முதலீட்டை ஈர்த்து தமிழகத்தில் பல்வேறு தொழில் சாலையை அமைத்து அதன் மூலம் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உறுதி செய்வதோடு மட்டும் இல்லாமல் அதனுடன் தொடர்புடைய சிறு குறு தொழில் வளர்ச்சி அடைந்து அனைத்து துறை வியாபாரிகளுக்கும் வாழ்வாதாரம் சிறந்து விளங்குமாறு அமைந்திட நம்முடைய முதல்வர் இரவு பகல் பாராமல் உழைத்து வருகிறார் ஆகவே சிறு வியாபாரிகள் ஆகிய நீங்கள் எந்த ஒரு சூழ்நிலையிலும் பாதிக்காத வகையில் உங்கள் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும் என்று உறுதி அளித்தார். உடன் திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஆர். சச்சிதானந்தம் நகர ஒன்றிய கழக உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உடன் இருந்தனர்.

கடலூர் மேற்கு மாவட்ட

# பொறியாளர் அணி நிர்வாகிகளுக்கான விண்ணப்பங்கள்!

## மாவட்டச்செயலாளர் - அமைச்சர் சி.வெ. கணேசன் அறிக்கை!

கடலூர், செப்.25-

கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க பொறியாளர் அணிக்கு ஒன்றிய, நகர, பேரூர், கழகங்களுக்கு, அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பதவிகளுக்கு விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் என மாவட்டக் கழக செயலாளர்-அமைச்சர் சி.வெ. கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணிக்கு ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களுக்கு அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விருப்ப முள்ள கழகத் தோழர்கள் கீழ்க்கண்ட வழிமுறைகளின் படி விண்ணப்பிக்க வேண்டுகிறோம்.

1.விண்ணப்பிப்பவர்கள் பொறியியல் பட்டப்படிப்பு / பட்டய படிப்பு நிறைவு செய்தவராக இருக்க வேண்டும்.

2.விண்ணப்பிப்பவர்கள் அந்தந்த பகுதியின் வாக்காளராக இருத்தல் அவசியம்.

3.ஒரு அமைப்பாளர். ஐந்து துணை அமைப்பாளர்கள் எனும் அளவுக்கு மிகாமல் பொறுப்புகள் நியமிக்கப்படுகின்றனர்.

4.பெண் பொறியியல் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

5. விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள QR CODE வழியே பொறியாளர் அணியின் போர்ட்டல் வழியே மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

6. விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தாரர்களை நேரில் அழைத்து நேர்முகத் தேர்வு நடைபெறும். எனவே ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மற்றும் மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் படி விண்ணப்பங்களை இணைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர் சி.வெ.கணேசன் தனது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.



பழனி கிரிவலப் பாதையில் ஆக்கிரமிப்புகள் அகற்றம் குறித்து உயர் நீதிமன்ற கிளை அமைத்த குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற நீதியரசர் பாரதிதாசன் அவர்களை சந்தித்து பழனி அடிவார மக்களின் வாழ்வாதாரம் குறித்து திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும் பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி. செந்தில் குமார் எடுத்து கூறி கோரிக்கை மனுவை அளித்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். சச்சிதானந்தம் மற்றும் அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் இருந்தனர்.

மாநில மாணவர் அணி துணை செயலாளர்கள் சி.ஜெரால்டு, சேலம் ரா.தமிழரசன், பி.எம்.ஆனந்த் பங்கேற்பு !

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக மாணவர் அணிக்கு நேர்காணல் !

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு !

திருச்சி, செப்.25-

திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



திருச்சி தெற்கு மாவட்டத்தில் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நேர்காணல் மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ அறிவிப்பின்படி திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், மணப்பாறை ஆகிய மூன்று சட்ட மன்றத் தொகுதிகளுக்கு 27.09.2024 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நேர்காணல் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகின்றது.

மாவட்ட கழக செயலாளர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையிலும், மாநில துணை செயலாளர் சி.ஜெரால்டு, சேலம்.ரா. தமிழரசன், பி.எம்.ஆனந்த் ஆகியோர் முன்னிலையில் நேர்காணல் நடைபெறும், பகுதி, நகர, ஒன்றிய, பேரூர் கழக அமைப்புகளுக்கு ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

அதில், (பெண்) கட்டாயமாக ஒரு நபர் துணை அமைப்பாளராக நியமிக்கப்பட வேண்டும். பொறுப்புக்கு விண்ணப்பிப்பவர்கள் 30 வயதிற்குட்பட்டவர்களாய் இருக்க வேண்டும் என்றும், அவர்கள் கல்லூரி படிப்பை முடித்திருக்க வேண்டுமெனவும், அல்லது தற்போது கல்லூரியில் பயிலக்கூடிய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி முறைகளை பின்பற்றி, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக அளவிலான மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்பிற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் 24.09.2024 முதல் 26.09.2024 வரை விண்ணப்பங்களை பெற்றுக்கொண்டு அதனை பூர்த்தி செய்து மாவட்ட கழக அலுவலகத்தில் அளித்து, நேர்காணலில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.